**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**STC NO.208/2023**

**PW. 3**

**Date: 26.05.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.விஜய் | வயது | 29 |
| கணவர்/தந்தை பெயர் | முருகன் | தொழில் | – |
| கிராமம் | போளூர் | வட்டம் | திருவண்ணாமலை |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **26th May 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

1 ஆம் எதிரி ஆஜர். 2 ஆம் எதிரி அஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை :</u>**

1. நான் விவசாயம் செய்து வருகிறேன். இறந்த எதிரி லட்சுமணன் என்பவரின் பாண்டியாஸ் என்ற உணவகத்தில் 2018 முதல் 2020 வரை நான் பணிபுரிந்தேன். கடந்த 2020 ஆம் ஆண்டு ஒரு நாள் மதியம் 02.00 மணியளவில் அந்த உணவகத்திற்கு உணவு பாதுகாப்புதுறை அலுவலர்கள் வந்தார்கள். தயாரிக்கப்பட்ட உணவு, கையிருப்பில் இருந்த உணவு பொருட்கள் ஆகியவற்றை அதிகாரிகள் ஆய்வு செய்தார்கள். அங்கு இருந்த சாஸ் காலாவதி ஆகியிருந்தது. அதன் மாதிரிகளை அதிகாரிகள் எடுத்துக்கொண்டார்கள். அதன் மாதிரி எடுத்ததற்கு அத்தாட்சியாக என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (**படிவம் 5**) உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**26/10/2018 படிவம் 5ல் உள்ள சாட்சி கையொப்பம் பு.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணதங்களில் (**ரொக்க ரசீது மற்றும் எதிரி லட்சுமணன் நியமன அலுவலகத்தில் கொடுத்த கடிதம்**) உள்ள கையொப்பம் என்னுடையது தான்.அந்த கையொப்பம் எதற்காக செய்தேன் என்று நினைவு இல்லை. (**26/10/2018 தேதியிட்ட ரொக்க ரசீது மற்றும் இறந்த எதிரி லட்சுமணன் நியமன அலுவலருக்கு கொடுத்த கடிதம் ஆகியவற்றில் உள்ள கையொப்பம் மட்டும் பு.சா.ஆ.20 ஆகவும், பு.சா.ஆ.21 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) இது சம்பந்தாக விவரங்கள் எனக்கு தெரியாது.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரலிருந்தும் குறுக்கு விசாரணை இல்லை

NILAVARASAN KASI    Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**STC NO.208/2023**

**PW. 2**

**Date: 26.05.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மருத்துவர் அனுராதா | வயது | 55 |
| கணவர்/தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | வட்டம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **26th May 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

1 ஆம் எதிரி ஆஜர். 2 ஆம் எதிரி அஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது கோயம்புத்தூர் மாவட்டம் உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 02/03/2019 அன்று காஞ்சிபுரம் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலராக பொறுப்பேற்றேன். இந்த வழக்கு சம்பந்தமாக உணவு பொருள் மாதிரி பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டு அதன் அறிக்கை வந்த பிறகு நான் கடந்த 26/11/2019 அன்று எதிரிகளுக்கு அந்த அறிக்கை சம்பந்தமாக மறு ஆய்வு செய்துக்கொள்ள 30 நாட்கள் கால அவகாசம் அளித்து கடிதம் அனுப்பினேன். (**மேற்கண்ட ஆவணம் பு.சா.1 ன் மூலமாக பு.சா.ஆ.12 ஆக ஏற்கனவே**

**குறியீடு செய்யப்பட்டுள்ளது**). ஆனால் அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்டும் எதிரிகள் தரப்பில் எவ்வித மேல்முறையீடும் செய்யப்படாததால் நான் எதிரிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய அனுமதி கோரி உணவு பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் அனுப்பினேன். அந்த கடிதத்தின் அடிப்படையில் உணவு பாதுகாப்பு துறை ஆணையர் எதிரிகள் மீது வழக்கு தொடுக்க 09/03/2020 அன்று அனுமதி வழங்கினார். (**09/03/2020 அனுமதி கடிதம் பு.சா.ஆ.13 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது**) அதன் பிறகு திருப்போரூர் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் எதிரிகள் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

2. இவ்வழக்கு குறித்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் உயர்அதிகாரிகளின் உத்தரவின் பேரில் உணவு பாதுகாப்பு அலுவலர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரலிருந்தும் குறுக்கு விசாரணை இல்லை

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.